# சிண்ட்ரெல்லா - தமிழ் சிறுகதை

## Cinderella - Short Story in Tamil




ஒரு ஊரில் சிண்ட்ரெல்லா எனும் ஓர் அழகான பெண் இருந்தால். ஒரு நாள் சிண்ட்ரெல்லாவின் அம்மா இறந்துவிட்டார். சிண்ட்ரெல்லாவின் அப்பா இரண்டவது திருமணம் செய்து கொண்டார். அவர்களுக்கு இரண்டு பெண் குழந்தைகள் பிறந்தனர். தன் குழந்தைகளுக்கு நல்ல துணியும் உணவும் கொடுத்த சிண்ட்ரெல்லாவின் சித்தி, சிண்ட்ரெல்லாவிற்கு எதுவும் கொடுக்கவில்லை.




ஒரு நாள் அந்த நாட்டின் அரசர் ஒரு அறிவிப்பு செய்தார், நாட்டின் உள்ள அணைத்து திருமணம் ஆகாத பெண்களை அரண்மனைக்கு விருந்திற்கு அழைத்தார். விருந்திற்கு வந்த பெண்களில் இளவரசருக்கு பிடித்த பெண்ணை இளவரசருக்கு திருமணம் செய்து வைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

இதை அறிந்த சிண்ட்ரெல்லாவின் சித்தி தன் இரண்டு மகள்களை அரண்மனைக்கு அழைத்து சென்றார். வீட்டில் இருந்த சிண்ட்ரெல்லாவின் முன் ஒரு தேவதை தோன்றி ஒரு மந்திர செருப்பை கொடுத்தர் அந்த செருப்பை அணிந்த சிண்ட்ரெல்லா ஒரு தேவதை போல மாறினாள். அரண்மனைக்கு செல்ல ஒரு சாரட் வண்டியும் தோன்றியது. நள்ளிரவில் சிண்ட்ரெல்லா திரும்பி வரும்படி தேவதை எச்சரித்தாள்.




அந்த வண்டியில் சிண்ட்ரெல்லா அரண்மனைக்கு சென்றாள். அழகான சிண்ட்ரெல்லாவை பார்த்த இளவரசர் சின்ரெல்லாவுடன் நடனம் ஆடினார். அவர்கள் இரவு முழுவதும் ஒன்றாக நடனமாடினர். கடிகாரம் பன்னிரண்டு மணி அடித்தபோது, சிண்ட்ரெல்லா தனது செருப்புகளில் ஒன்றை விட்டுவிட்டு தனது வண்டியை நோக்கி விரைந்தாள்.



இளவரசர் அந்த செருப்பை எடுத்து வைத்து கொண்டு சிண்ட்ரெல்லாவை தேடினார். இளவரசர் காவலர்களுக்கு ஒரு கட்டளை அளித்தார், நாட்டில் அணைத்து பெண்களையும் அந்த செருப்பை அணிந்து அது யாருக்கு சரியாக இருக்கிறதோ அந்த பெண்ணை அரண்மனைக்கு அழைத்துவர கட்டளையிட்டார்.




காவலர்கள் ஊரில் உள்ள அணைத்து வீட்டிற்கும் சென்று அந்த செருப்பை வைத்து சோதனை செய்தார்கள். சிண்ட்ரெல்லா அந்த செருப்பை அணிந்தவுடன் மீண்டும் அழகாக மாறினாள். இளவரசரும் சிண்ட்ரெல்லாவும் திருமணம் செய்துகொண்டு சந்தோசமாக வாழ்ந்தனர்.